

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | செப்டம்பர் 6, 2018 | புரட்சி 17 | முழக்கம் 34 | விலை: ரூ.3.00


## ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு – நேரில் மனு

ஆகஸ்ட் 30 – அனைத்துலக காணாமற் போனோர் நாளை முன்னிட்டு இலங்கையில் காணாமலாக்கப்பட்ட 20000க்கும் மேலான ஈழத் தமிழர்களுக்கு நீதி கோரி அடையாறு யுனிசெப் அலுவலகத்தில் மனு கொடுக்கப்பட்டது.

ஆகஸ்ட் 31 வெள்ளி அன்று காலை 11 மணி அளவில் அடையாறில் காந்தி கஸ்தூரிபாய் ரயில் நிலையத்தின் பின்புறம் உள்ள யுனிசெப் அலுவலகத்தில் உள்ள கள அதிகாரியிடம் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையருக்குமான கோரிக்கை மனு கொடுக்கப்பட்டது.

ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தி.வேல்முருகன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் வன்னியரசு, திராவிடர் விடுதலைக் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வழக்கறிஞர் அணியின் மாநிலச் செயலாளர் பார்வேந்தன், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் அனைத்திந்திய துணைத் தலைவர் பேராசிரியர் சரசுவதி, உரிமைத் தமிழ் தேசத்தின் ஆசிரியர் தியாகு, தமிழ்த்தேச மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் பாலன், மனிதநேய மக்கள் கட்சியின் இளைஞர் அணிச் செயலாளர் சேக், தந்தைப் பெரியார் திராவிடர் கழகத்தின் சென்னை மாவட்டத் தலைவர் ச.குமரன், தமிழ்த்தேசிய பேரியக்கத்தின் நிர்வாகி கோவேந்தன், இளந்தமிழகம் இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் செந்தில் உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் யுனிசெப் அலுவலகத்தில் இருந்த கள அதிகாரியிடம் ஈழத் தமிழர் துயரத்தை எடுத்துச் சொல்லி ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் ஐ.நா. மனித உரிமை ஆணையருக்குமான கோரிக்கை மனுவைக் கையளித்தனர்.

பின்னர் பத்திரிகையாளர்களைச் சந்தித்து ஈழத் தமிழர்கள் சந்தித்து வரும் காணாமலடிக்கப்பட்டோர் பிரச்சனைப் பற்றியும் அது குறித்து நிலவி வரும் சர்வதேச மௌனத்தை எடுத்துக் காட்டினர்.

விடுதலைப் போராட்டம் நடக்கும் பல்வேறு நாடுகளில் காணாமலடிக்கப்படும் அவலம் நீடிக்கின்ற போதிலும் உலகில் எங்குமே இலங்கையில் நடந்தது போல் சரணடைந்தவர்கள் காணாமலடிக்கப்பட்டது கிடையாது. அப்படி சரணடைந்து காணாமலடிக்கப்பட்டவர்களில் குழந்தைகளும் அடங்குவர். சரணடைந்த குழந்தைகளைக் காணாமலடித்திருக்கும் அவலம் உலகில் எங்குமே இல்லை.

இந்த உண்மைகள் ஊடகத்தில் எடுத்துச் சொல்லப்பட்டது.

(மனு விவரம் தனியே)

# ஈழப் போரில் சரணடைந்த குழந்தைகளின் கதி என்ன?

***ஈழத் தமிழர் வாழ்வுரிமை கூட்டமைப்பு சார்பில் அய்.நா.வின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான 'யுனிசெப்' அதிகாரியிடம் சென்னையில் நேரில் அளிக்கப்பட்ட மனுவின் உள்ளடக்கம்.***

ஆகஸ்ட் 30 ஆம் நாளில் வலுக்கட்டாயக் காணாமலடிக்கப்பட்டவர்களை உலகம் நினைவுகூர்வது போலவே, தமிழ்நாட்டில் உள்ள ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாங்கள், இலங்கையில் காணாமலாக்கப்பட்ட பத்தாயிரக்கணக்கான தமிழர்களின் நிலையை ஐ.நா.வின் வலுக்கட்டாயக் காணாமலடித்தல் பற்றிய குழுவில் எழுப்புமாறு வலுக்கட்டாயக் காணாமலடித்தலிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான பன்னாட்டு ஒப்பந்தத்தில் (ICPPED) கைசாத்திட்டுள்ள நாடுகளை வலியுறுத்துகிறோம்.

இலங்கையில் பத்தாயிரக்கணக்கானத் தமிழர்கள் இறுதிப் போரின் போதும் அதற்கு முன்பும் பின்பும் வலுக்கட்டாயக் காணாமலடித்தலுக்கு ஆளானதோடு இறுதிப் போர் முடிந்து ஒன்பது ஆண்டுகளாகியும் அவர்களின் நிலை வெளிப்படாமலும் கண்டறியப்படாமலும் உள்ளது. ஐ.நா. கணக்குப்படி, உலகிலேயே காணாமலடிக்கப்பட்டோரை அதிகமாக கொண்டுள்ள நாடுகளில் இலங்கை இரண்டாம் இடத்தில் உள்ளது.

இதில் எண்ணற்ற குழந்தைகளும் அடங்குவர். அவர்கள் 2009 ஆம் ஆண்டு மே மாதத்தில் போரின் கடைசி நாட்களில் சிறிலங்கா அரசப் படைகளிடம் சரணடைந்த குடும்பங்களோடு இருந்தவர்கள். தங்களுடைய பாதுகாப்புக்கு உறுதியளித்ததை நம்பி போரின் முடிவில் தாமாக முன்வந்து சிறிலங்கா அரசப் படைகளின் கைகளில் தம்மை ஒப்படைத்துக் கொண்ட எண்ணற்ற குழந்தைகள், சிறுவர், சிறுமிகள் உள்ளிட்ட தமிழர்கள் இதில் அடங்குவர்.



சிறிலங்காவில் உள்ள தமிழ்த்தேசமும் அதன் புலம்பெயர் மக்களும் இந்தியாவில் உள்ள தமிழ் மக்களாகிய நாங்களும் கிட்டத்தட்ட சிங்களர்களை மட்டுமே கொண்ட சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டில் கடைசியாக கண்ட எண்ணற்ற தமிழர்கள் வலுகட்டாயமாக காணாமலாக்கப்பட்டதன் நீண்டகால விளைவுகளால் தொடர்ந்து துன்பத்தில்இருக்கிறோம்.

காணாமலடித்தலுக்கு எதிரான ஒப்பந்தத்தை சிறிலங்கா 2016 மே மாதம் ஏற்புறுதி செய்த போது, சிறிலங்காவில் வலுக்கட்டாயக் காணாமலடித்தலைச் செய்தவர்கள், ஆணையிட்டவர்கள், செய்யச் சொன்னவர்கள், அல்லது அதில் உடந்தையாக இருந்தவர்கள் மீது குற்றப் பொறுப்பு சுமத்த தனக்குள்ள சட்டக் கடமையை ஏற்றுக் கொண்டது. ஆனால் இந்த நாள் வரை அப்படிச் செய்ய சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் எவ்வித முயற்சியும் இல்லை.

இலங்கை அரசாங்கம் சர்வதேச விதிகளின் கீழான கடமைகளையும் சரி, தானே முன்வந்து முற்றாக நடைமுறைப்படுத்துவதாக ஐ.நா.விடம் உறுதியளித்த ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் 30/1 மற்றும் 34/1 தீர்மானங்களின் கீழான கடமைகளையும் சரி, நிறைவேற்றத் தவறிவிட்டது. இவைமட்டுமின்றி, சிறிலங்கா அரசாங்கம் ஏராளமான உறுதிமொழிகளை அளித்திருந்தும் இராணுவத்தைச் சார்ந்த ஒருவரைக்கூட நீதியின் முன்பு நிறுத்தவில்லை.

காணாமலாக்கப்பட்டோரின் தாய்மார்கள் இலங்கை அதிபர் மைத்ரிபால சிறிசேனாவை சந்தித்த போது, 2009 மே மாதத்தில் போரின் முடிவில் சரணடைந்தவர்களின் பட்டியலை வெளியிடுமாறு அடுத்தநாள் நடக்கவிருக்கும் பாதுகாப்பு அவைக்கூட்டத்தில் ஆணையிடுவதாக அவர்களுக்கு உறுதியளித்திருந்தார். ஆனால், இதுவரை தன்னுடைய உறுதிமொழியை நிறைவேற்றத் தவறியுள்ளார்.

மேலும், தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்கே தைப்பொங்கலை முன்னிட்டு வடக்கில் உள்ள யாழ்நகரத்திற்கு சென்றிருந்தபோது, 2016 சனவரி 15 இல் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில், " போரின்முடிவில் 2009 மே மாதத்தில் சிறிலங்கா அரசப்படைகளிடம் சரணடைந்த அனைவரும் உயிரோடில்லை" என்று சொன்னார். இந்நாள்வரை, சரணடைந்தவர்கள் கொல்லப்படுவதற்கு யார் பொறுப்பு? அவர்கள் எப்படி கொல்லப்பட்டார்கள்? அவர்களுடைய இறந்த உடல்கள் எங்கே? உள்ளிட்ட கேள்விகளுக்கு விளக்கம் தர மறுக்கிறார்.

ஆயுதமோதலின்போதும்அதற்கு முன்பும் பின்பும் சிறிலங்கா அரசாங்கம் வலுக்கட்டாயக் காணாமலடித்தலை தமிழ்த்தேசத்திற்கு எதிரான இனப்படுகொலையின் திட்டமிடப்பட்ட கருவியாக கையாண்டுள்ளது.

நன்கு அறியப்பட்ட வெள்ளைவேன் கடத்தல்கள் தமிழர்களுக்கும் மாற்றுகருத்துக் கொண்ட சில சிங்களர்களுக்கும்கூட எதிரான அடக்குமுறைக் கருவியாக மாறிப்போனது. காணாமலடிக்கப்பட்ட தமிழ்மக்களோடு சேர்த்து ஆயுதமோதலின் முடிவில் சரணடைந்த பெரும்பாலான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்களின் நிலையும் தெரியாமலே இருக்கிறது. 2015 நவம்பர் மாதம் சிறிலங்காவுக்குச் சென்று அய்.நா. குழு நேரில் பார்வையிட்டு வெளியிட்ட அறிக்கையின்படி உலகில் காணாமல் போனவர்கள் எண்ணிக்கையில் சிறிலங்கா இரண்டாமிடம் வகிக்கிறது.

சிறிலங்கா 2016 அக்டோபரிலும் 2017 மார்ச்சிலும் மனித உரிமை மன்றத்தில் "காணாமல் போனோர் அலுவலகம் அமைத்துள்ளோம், இது ஒரு சாதனை" என்று கூறியது ஏமாற்றுப் பேச்சே. தமிழ்ச் சமுதாயத்தின் பிரதிநிதிகள் பன்னாட்டு வல்லுநர்களின் பிரதிநிதிகள் ஏதுமில்லாமலும் காணாமல் போனோர் அலுவலகம் அமைத்திருப்பது சர்வதேசச் சமுதாயத்தை ஏமாற்ற சிறிலங்கா மேற்கொண்டுள்ள வஞ்சக முயற்சியே ஆகும்.

காணாமற்போனோர் அலுவலகத்தில் ஐ.நா. மற்றும் பிற பன்னாட்டு வல்லுநர்களை சேர்க்க வேண்டும் என்ற தொடர்ச்சியான வேண்டுகோள் இலங்கை அரசால் மறுக்கப்பட்டன. குப்புறத் தள்ளிய குதிரை குழியும் பறித்தது போல் முன்னாள் மூத்த பாதுகாப்பு படை அதிகாரி மேஜர் ஜெனரல் (ஓய்வு) மோகந்தி பிரிசை காணாமற்போனோர் அலுலகத்தின் ஆணையர்களில் ஒருவராக அண்மையில் ஆக்கியுள்ளது சிறிலங்கா அரசாங்கம்.

காணாமல் போனவர்களின் பாதிப்புற்ற குடும்பத்தினர் உள்நாட்டுச் சட்டத்தின்படி உண்மையான இழப்பீடு பெறும் வாய்ப்பை மறுப்பது மட்டுமல்லாமல், வலுக்கட்டாயக் காணாமலடித்தலுக்கு எதிரான ஒப்பந்தத்தின் 31ஆம் உறுப்பில் கண்டவாறு இந்தக் குடும்பத்தினரிடமிருந்து நேராக முறையீடுகள் பெற அய்.நா. குழுவுக்கு உள்ள உரிமைகளுக்கும் வழிவிடாமல், இலங்கை தடுத்து வருகிறது.

உள்நாட்டு வழிமுறையோ பன்னாட்டு வழிமுறையோ எதற்கும் இடமில்லை என்ற நிலையில், காணாமல் போனவர்களின் தாய்மார்களும் மனைவிமார்களும் கிளிநொச்சியிலும் பிற மையங்களிலும் மாதக்கணக்கில் தொடர்ந்து அறப்போராட்டம் நடத்தி வருகிறார்கள். எங்கள் குடும்பத்தினரை விடுதலை செய்க! அல்லது அவர்களுக்கு என்ன நேரிட்டது என்ற உண்மையை அறிய நம்பகமான புலனாய்வு செய்க! என்பதே அவர்கள் கோரிக்கை. அமைதியான முறையில் நடைபெறும் இந்தப் போராட்டங்கள் அரசின் வன்முறைக்கு இலக்காகியுள்ளன.

இந்தப் பெண்களும் காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் அனைவரும் ஆண்டுக் கணக்கில் செய்வதறியாமல் திகைத்துப் போய் வாழ்ந்து வருகின்றனர். வாரிசுரிமையாகச் சொத்தில் பங்கு பெற முடியவில்லை. உரிமைப் பத்திரம் வைத்துக் கொள்ளவோ உதவி கோரி விண்ணப்பிக்கவோ முடியவில்லை என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ●

## ஜாதகப்படி ஆட்சி நடத்தும் உ.பி. ‘சாமியார்’ முதலமைச்சர்

உத்தரபிரதேசத்தில் காவி சாமியார் ஆதித்ய நாத் என்பவரை முதல்வராகக் கொண்ட ஆட்சி நடக்கிறது. அங்கிருந்து வரும் செய்திகள், காட்டுமிராண்டி காலத்தில் வாழ்கிறோமா என்ற சிந்தனைக்கே அழைத்துச் செல்கிறது.

சட்டத்தைக் குப்பைக் கூடையில் வீசிவிட்டு, ஜாதகத்தை சட்டமாகக் கொண்டு அங்கே ஆட்சி நடத்துகிறார்கள். “ஜாதகப்படி நீ சிறை செல்ல வேண்டியிருக்கும். அதிலிருந்து தப்ப வேண்டுமானால் குற்றம் செய்யாத போதே ஒரு நாள் சிறைக் காவலில் இருந்து விட்டால் குற்றம் செய்து விட்டு சிறைக்கு செல்வதிலிருந்து தப்பிக்க முடியும். இதுதான் பரிகாரம்” என்று சோதிடர்கள் தன்னை நாடி வரும் தொழிலதிபர்களிடமும் வாடிக்கையாளர்களிடமும் கூறுகிறார்களாம்.

அதை நம்பி தங்களை ஒரு நாள் சிறைக் காவலில் வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பலரும் மனுப் போடுகிறார்களாம். மாவட்ட ஆட்சித் தலைவரும் அவர்கள் ‘ஜாதகத்தை’ சோதிடர்களைக் கொண்டு பரிசீலித்து ஜாதகப்படி சரியாக இருந்தால் ஒரு நாள் ‘லாக்-அப்’பில் இருக்க அனுமதிக்கிறார்களாம்.

இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கவுஷல் ராஜ் சர்மா என்பவர் கூறும்போது, “இது போல் ஆண்டுதோறும் 24க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் வருகின்றன. அவர்களுடைய ஜாதகத்தை நன்கு பரிசீலித்த பிறகு அனுமதி வழங்குகிறோம்” என்று கூறியுள்ளார்.

“எந்தக் குற்றமும் செய்யாத ஒருவரை சிறைக் காவலில் (லாக்-அப்பில்) அடைக்க சட்டத்தில் இடமில்லை. என்றாலும் முழுக்க முழுக்க மத அடிப்படையில் இதை செயல்படுத்துகிறோம்” என்று மாவட்ட அதிகாரிகள் கூறுகிறார்கள்.

எதிர்காலத்தில் குற்றங்கள் செய்து நீதிமன்றம் தண்டனை விதித்தால் ஏற்கனவே ‘லாக்-அப்’பில் இருந்து பரிகாரம் தேடி விட்டதால் அவர்களைக் கைது செய்யத் தேவை இல்லை என்று ‘ஜாதகப்படி’ உ.பி. அரசு நீதிமன்றத்தில் அறிவிக்குமா? இன்னொரு செய்தியும் இருக்கிறது.

உ.பி.யில் “இராமபக்த அனுமான்களின்’ (குரங்குகள்) சேட்டைகள் அதிகரித்துக் கொண்டிருப்பதாக பொது மக்கள் குரங்குகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வற்புறுத்தி வருகிறார்கள். இது குறித்து தன்னிடம் மனு அளிக்க வந்தவர்களிடம் முதலமைச்சர் ஒரு ஆலோசனை வழங்கியுள்ளார்.

“ஹனுமானை நாள் தவறாமல் வணங்கி, அவர் மீதான ‘பஜ்ரங்பலி’ மந்திரத்தை ஓதினால், என்றுமே குரங்குகள் தொல்லை தராது; போய் வாருங்கள்” என்று அறிவுரை கூறினாராம்.

மதுரா, பிருந்தாவன் பகுதிகளில் குரங்குகள் பக்தர்களையும், மக்களையும் மிரட்டி உணவுகளைப் பிடுங்குகின்றன. குறிப்பாக மூக்குக் கண்ணாடிகளைப் பிடுங்கி வைத்துக் கொண்டு உணவு கேட்பது வழக்கமாம். உ.பி. முதல்வரோ ‘மந்திரம்’ ஓதச் சொல்கிறார்; குரங்குகள் அதைக் கேட்குமா?

# ரிசர்வ் வங்கி ஒப்புதல் : பண மதிப்பு நீக்கம் படுதோல்வி?

**500,** 1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்று 2016, நவடம்பர் 8ஆம் நாள் நள்ளிரவு பிரதமர் மோடி அறிவித்தவுடன் இந்த ரூபாய் நோட்டுகளின் புழக்கத்திலிருந்த மதிப்பான ரூ.15.44 இலட்சம் கோடியில் கறுப்புப்பணம் முடங்கிவிடும்; புரட்சிகர அறிவிப்பு என்றெல்லாம் கூறப்பட்டது. வேடிக்கை என்னவென்றால் இதில் 99.3 சதவீதம் (ரூ.15.28 இலட்சம் கோடி) அப்படியே வங்கிக்கு திருப்பி மாற்றப்பட்டுவிட்டன என்று இப்போது ரிசர்வ் வங்கியின் அறிக்கை கூறுகிறது. திரும்பி வராமல் முடங்கியது 0.71 சதவீதமான 10 ஆயிரம் கோடிதான். இந்த 10 ஆயிரம் கோடி கறுப்புப் பணத்தை முடக்க, ரூ.2.25 இலட்சம் கோடி மதிப்பு மிக்க உள்நாட்டு உற்பத்திகளும், வேலை வாய்ப்புகளும் பாதிக்கப்பட்டன. தங்கள் சேமிப்புத் தொகையை அன்றாட செலவுக்கு வங்கியிலிருந்து எடுப்பதற்காக நாடு முழுதும் மக்கள் கியூ வரிசையில் நின்று அதில் 100 பேர் உயிரிழந்தனர். ஏராளமான சிறு, குறு தொழில்கள் மூடப்பட்டதோடு 1000 ரூபாய் நோட்டுக்கு பதிலாக 2000 ரூபாய் நோட்டு கொண்டு வரப்பட்டதால் பணப் பரிவர்த்தனைக்கு மக்கள் இன்று வரை திணறிக் கொண்டிருக்கின்றனர். இது குறித்து ஆராய்ந்த நாடாளுமன்றக் குழு அறிக்கையை வெளி வரவிடாமல் மத்திய அரசு தடுத்துக் கொண்டிருக்கிறது. ஏன் அதைத் தடுக்க வேண்டும்? வெளி வந்துவிட்டால் அரசு முகத்திரை கிழிந்து தொங்கும் என்ற அச்சம் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

இந்த பண மதிப்பு நீக்க நடவடிக்கையை ரிசர்வ் வங்கி ஆளுநராக இருந்த ரகுராம்ராஜன் ஆதரிக்கவில்லை. அதற்காகவே அவர் பதவி ஓய்வு பெறும் காலம் வரை மோடி காத்திருந்தார்.

இப்போது நாட்டின் பொருளாதாரத்தை சீர்குலைத்தது ரகுராம் ராஜன் உருவாக்கிய மோசமான நிதிக் கொள்கைதான் என்று குற்றம்சாட்டக் கிளம்பியிருக்கிறார்கள். திட்டக் குழுவைக் கலைத்துவிட்டு ‘நிதி ஆயோக்’ என்ற அமைப்பை உருவாக்கியது மோடி ஆட்சி. அதன் துணைத் தலைவரான ராஜிவ் குமார், ரகுராம்ராஜன் பெயரைக் குறிப்பிட்டு அவர்தான் பொருளாதார வளர்ச்சியை தேக்கமடைய வைத்தார் என்று குற்றம்சாட்டியுள்ளார். ஆக பொருளாதார வளர்ச்சி முடங்கி நிற்கிறது என்பதை ஆட்சியாளர்களே ஒப்புக் கொள்ளும் நிலை வந்துவிட்டது.

வங்கிகளில் பல ஆயிரம் கோடி கடன் வாங்கி பட்டை நாமம் போடும் தொழிலதிபர்களைக் குற்றம் சொல்ல முடியாது என்றும், வங்கிகளுக்கு கடன் திரும்பி வராததற்குக் காரணம் ரகுராம் ராஜன் உருவாக்கிய வங்கிகளுக்கான கொள்கைகள்தான் என்கிறார் நிதி அயோக் துணைத் தலைவர் ராஜிவ் குமார்.

ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்த ஒரு அதிகாரி, நாட்டின் பொருளாதாரத்தையே தீர்மானிக்க முடியும் என்றால், நிதி அமைச்சர், நிதி அமைச்சகம் எல்லாம் எதற்கு?

ஆட்சிக்கென்று கொள்கை ஏதும் கிடையாதா?

நாட்டின் பொருளாதாரத் தேக்கத்துக்குக் காரணம், ‘ஆட்சியல்ல; ஆண்டவன் அப்படி சோதிக்கிறான்’ என்று, எதிர்காலத்தில் இவர்கள் பேசினாலும் வியப்பதற்கில்லை!

## ‘விநாயகன்’ ஊர்வலம் : சென்னை மாவட்டக் கழகம் காவல் துறையிடம் மனு

விநாயகன் சதுர்த்தியை முன்னிட்டு சுற்றுச் சூழல் பாதிக்கும் வகையில் விநாயகர் சிலைகளை இரசாயன பொருட்களைக் கொண்டு தயார் செய்வதைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கக் கோரியும், மதநல்லிணக்கத்திற்கு எதிராக செயல்படும் நடவடிக்கைகளை தடுக்கக் கோரியும் தென்சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி தலைமையில் 03.09.2018 காலை 11 மணிக்கு காவல் ஆணையாளர் அலுவலகத்தில் கழகத் தோழர்கள் மனுவை அளித்தனர்.



# பெட்ரோல் விற்பனை நிலையங்களில் மோடி படம் வைக்கச் சொல்லி மிரட்டல்

பெட்ரோல் நிலையங்களில் பிரதமர் மோடியின் படத்தைக் கட்டாயம் வைக்க வேண்டும் என்று பொதுத்துறை பெட்ரோலிய நிறுவனங்கள் வாய்மொழி உத்தரவிட்டுள்ளது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

பொதுத்துறை நிறுவனங்களான இந்தியன் ஆயில், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் ஆகியவை பெட்ரோல் டீலர்களுக்கு இத்தகைய வாய்மொழி உத்தரவை வழங்கியுள்ளது.

இந்த உத்தரவு குறித்து இந்திய பெட்ரோல் டீலர்கள் கூட்டமைப்பின் தலைவர் எஸ்.எஸ்.கோகி தி இந்து (ஆங்கிலம்) நாளிதழுக்குக் கூறும்போது, “பிரதமர் நரேந்திர மோடியின் படத்தை பெட்ரோல் நிலையங்களில் வைக்குமாறு உத்தரவிடுகின்றனர். இதற்கு மறுப்பு தெரிவிப்பவர்களுக்கு சப்ளை நிறுத்தப்படும் என்ற மறைமுக அச்சுறுத்தலும் விடுக்கப்படுகிறது” என்று அதிர்ச்சித் தகவலை வெளியிட்டார்.

பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களின் ஏரியா அதிகாரிகள் மூலம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதாவது வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு எல்பிஜி இணைப்பு வழங்கும் திட்டத்தை குறிப்பிட்டு ஒரு படம் வைக்க வேண்டும் என்ற உத்தரவே அது. நிறுவனங்களின் பிராந்திய அதிகாரிகளிடமிருந்தோ, விற்பனை அதிகாரிகளிடமிருந்தோ எழுத்து பூர்வமாக இது குறித்த உத்தரவு இல்லை. என்கிறார் கோகி.

பெட்ரோல் நிலைய ஊழியர்களின் சுயவிவரம் கேட்பு:

சமீபத்தில் பெட்ரோல் நிலையங்களில் பணியாற்றுவோரின் சுயவிவரங்களை பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் கேட்டதாகவும் ஆனால் அதனை அளிக்க பெட்ரோலிய டீலர்கள் கூட்டமைப்பு மறுத்ததாகவும் அவர்கள் தெரிவித்தனர், ஊழியர்களின் சுய விவரங்களை வைத்துக் கொண்டு அவர்களை சாதி, மதம் ரீதியாக பிரித்து கணக்கெடுக்க முடிவு எடுப்பதாக சந்தேகத்ததால் விவரங்களை அளிக்க மறுக்கப்பட்டுள்ளதாக சில டீலர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஜூன் மாதம் டீலர்களுக்கு ஒரு படிவம் அனுப்பப்பட்டுள்ளது. அதில், “பாதுகாக்கப்பட வேண்டிய சொந்த விவரங்களான சாதி, மதம், ஊழியர்களின் தொகுதி ஆகியவை குறித்த விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. இந்த விவரங்களை யார் கேட்டாலும் அது தனியுரிமையை மீறுவதாகும் ஆனால் அரசே கேட்கிறது. நாங்கள் நீதிமன்றம் செல்லவிருக்கிறோம்” என்றார் கோகி.

படிவத்தில் திருமணமானவரா இல்லையா, மொபைல் எண், தந்தை அல்லது காப்பாளர் பெயர், ஆதார் எண், மதம், சாதி, தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி, அனுபவம், கல்வித் தகுதி ஆகியவையோடு வங்கி கணக்கு விவரங்களையும் கேட்டுள்ளது.

இதனையடுத்து ஜூன் 11ஆம் தேதி பெட்ரோலிய டீலர்கள் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு கடிதம் எழுதி இந்த முயற்சி அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது என்று எதிர்ப்புத் தெரிவித்தனர். பஞ்சாபின் பெட்ரோல் நிலைய உரிமையாளர்கள் கூட்டமைப்பு ஐ.ஓ.சி.எல்., ஹிந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் ஆகிய நிறுவனங்களின் மூத்த செயலதிகாரிகளுக்கு நோட்டீஸ் அனுப்பி யுள்ளனர்.

ஆனால் பெட்ரோலிய நிறுவன அதிகாரி ஒருவர் இது குறித்து கேட்ட போது, சுயவிவரங்களைக் கேட்டதாக ஒப்புக் கொண்டனர், ஆனால் பிரதமரின் திறன் வளர்ப்பு அமைச்சகத்துக்காகக் கேட்டதாகத் தெரிவித்தனர்.

இது குறித்து வியாழனன்று அனுப்பப்பட்ட மின்னஞ்சலுக்கு பெட்ரோலிய நிறுவனங்கள் இன்னும் பதிலளிக்கவில்லை.

# பயண அனுபவங்கள் : தோழர்களின் பகிர்வு

***ஆகஸ்ட் 21 முதல் 26 வரை திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய 'தமிழர் கல்வி உரிமை மீட்பு'ப் பரப்புரைப் பயணத்தில் பங்கேற்ற தோழர்களின் பயண அனுவபங்கள்.***

**சென்னை குழுவின் அனுபவங்கள் பற்றி உமாபதி**



கல்வி உரிமைகள் குறித்த பரப்புரைப் பயணம் என்பதால் கலைக்குழுவுக்கு அதிக நேரத்தை எல்லா இடத்திலும் வழங்கினோம். எங்களுடன் வந்த விரட்டு கலைக் குழுவின் நாடகம் பரப்புரையின் நோக்கத்தை மக்களிடம் மிக எளிமையாக விளக்கியது. தங்களுக்குத் தேவையான செய்திகளைப் பேசுகிறார்கள் என்பதைப் புரிந்து எல்லா இடங்களிலும் மக்கள் தங்களது பேராதரவைத் தந்தனர். சென்ற இடங்களில் கடை வைத்திருந்த ஏழை, எளிய உழைக்கும் மக்கள், நம் நிகழ்ச்சியை முடித்த பிறகு குளிர்பானங்கள், பழங்கள் வாங்கிக் கொடுத்து பல இடங்களில் எங்களை உற்சாகப்படுத்தினர்.

ஒரு இடத்தில் தோழர்கள் பரப்புரையில் புத்தகம் விற்றுக்கொண்டிருந்தபோது நாடகத்தைப் பார்த்துவிட்டு, "எனக்குப் படிக்கத் தெரியாது, நீங்கள் ஏதோ நல்லது செய்கிறீர்கள் என்பது மட்டும் புரிகிறது" என்றுகூறி தனது மகனுக்குப் புத்தகங்களை வாங்கிச் சென்றார் ஒரு பெரியவர். மற்றொரு இடத்தில் பள்ளிச் சிறுவன் தனது பேருந்துக்கு வைத்திருந்த 5 ரூபாயில், "பேருந்துக் கட்டணம் 4 ரூபாய்தான், மீதி ஒரு ரூபாயை உங்களுக்குத் தருகிறேன்" என்று கொடுத்துவிட்டு சென்றார். இதுபோல பரப்புரை செய்த எல்லா இடங்களிலும் மக்கள் 10 ரூபாய், 20 ரூபாய் என தங்களால் இயன்ற தொகையை நன்கொடையாக அளித்து நமது பிரச்சாரத்திற்கு உதவினார்கள். இவ்வாறு ஒட்டுமொத்தமாக மக்கள் அளித்த நன்கொடை ரூ.62,000. அதுமட்டுமின்றி 20,300 ரூபாய்க்குப் புத்தகங்களையும் மக்கள் வாங்கிக் கொண்டனர். அதேபோல சென்ற இடங்களில் எல்லாம் காவல் துறையின் ஒத்துழைப்பும் மிகச் சிறப்பாக இருந்தது. கல்வி உரிமைகள் குறித்து இந்தப் பயணம் மக்களிடையே நிச்சயமாக ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதுதான் அவர்கள் அளித்த ஆதரவின் மூலம் எங்களால் உணர முடிந்தது.

**திருப்பூர் பயணக் குழுவின் அனுபவங்கள் பற்றி மடத்துக்குளம் மோகன்**



எங்கள் குழுவில் பெரும் பாலானவர்கள் பெண்களாகத்தான் இருந்தார்கள். எல்லா இடங் களிலும் அவர்களின் செயல்பாடு மிகச் சிறப்பாக இருந்தது. கடை வசூல், புத்தகம் விற்பனை, பிரச்சாரம் என அனைத்துப் பணிகளிலும் பெண்கள் 6 நாட்களும் மிகவும் ஆர்வத்தோடு செயல்பட்டனர். பயணம் நடந்த எல்லா பகுதிகளிலும் காவல் துறையினர் எங்களுக்கு மிகச் சிறப்பான ஒத்துழைப்பை அளித்தனர். சில இடங்களில் காவல் துறையினர் நன்கொடைகள் அளித்து, நீங்கள் பேசும் செய்திகள் மிகவும் அவசியமானது என்று பாராட்டினர். ஒரு இடத்தில் இந்து முன்னணியினர் வந்து தகறாரில் ஈடுபட்ட போது காவல் துறையினர் "அவர்களை நாங்கள் காலையிலிருந்து பின் தொடர்ந்து வருகிறோம். அவர்கள் நல்ல செய்தியை பேசுகிறார்கள், நீங்கள் கிளம்புங்கள்" என்று அவர்களை விரட்டிவிட்டனர். தொடர்ந்து எங்களுக்கு பாதுகாப்பும் அளித்தனர். தொடர்ந்து அந்தப் பகுதியில் பேசிக் கொண்டிருந்தபோது "விவசாயிகளை திட்டமிட்டு மோடி அழிக்கிறார். எனவே மோடி ஆட்சியை முதலில் ஒழிக்க வேண்டும். அதையும் சேர்த்துப் பேசுங்கள்" என்று கூறி 500 ரூபாய் நன்கொடை அளித்துச் சென்றார் அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர்.

மடத்துக்குளத்தில் நாங்கள் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது சிவ பக்தர் ஒருவர் தோழர்களுக்கு திராட்சை பழச்சாறு வாங்கிக் கொடுத்து, மிகவும் அவசியமான செய்திகளை பேசுகிறீர்கள் என்று பாராட்டிச் சென்றார். திண்டுக்கல் பாப்பம்பட்டி கிராமத்தில் பிரச்சாரம் செய்தபோது திருப்பூர் தோழர்கள் சங்கீதா-தனபால் இணையர்களின் மகள்கள் யாழினி மற்றும் யாழிசை அறிவியல் விளக்கப் பாடலை பாடினார்கள். அந்தப் பாடலைக் கேட்டதும், அப்பகுதியில் இருந்த ஏராளமான மக்கள் பிரச்சாரத்தைக் காண குவிந்தனர். மற்றொரு இடத்தில் இவர்கள் பாடலைக் கேட்டு எதிரே சிறியதாக கொய்யாப் பழக் கடை வைத்திருந்த பாட்டி ஒருவர் பைகளில் கொய்யாப் பழத்தை எடுத்து வைத்து இவர்களின் கைகளில் கொடுத்து, இருவரையும் கட்டியணைத்து முத்தம் கொடுத்தார். பிறகு அங்கேயே இருந்து முழு நிகழ்ச்சியையும் பார்த்தார்.

திண்டுக்கல்லில் ஒரு இடத்தில் பிரச்சாரம் செய்த போது, ஆர்.எஸ்.எஸ். அமைப்பினர் வந்து நிகழ்ச்சியை நடத்த விடாமல் இடையூறு செய்தனர். பெரியார் அமைப்பினர் வந்து எங்களுக்கு இதெல்லாம் சொல்லித் தர வேண்டாம் என்று கூச்ச லிட்டனர். "நீட் தேர்வால்தான் அனிதா இறந்தார். நாங்கள் கல்வி உரிமையைத்தான் பேசுகிறோம், இதில் என்ன எதிர்ப்பு" என்று கேட்டோம். எங்களுக்குத் தெரியும் நீங்கள் பேசக் கூடாது என்று அவர்கள் மீண்டும் கூறினார்கள். "நாங்கள்தான் கடவுளை மறுப்பவர்கள். நீங்கள் கடவுளை ஏற்பவர்தானே, நீங்கள் இந்துதானே? அனிதாவும் இந்துதான், நீங்கள் வந்து பேசுங்கள்" என்று பொறுமையாக அவர்களிடம் கூறினோம். இதைப்பார்த்த உடனே அங்குக் கூடியிருந்த பொதுமக்களே அவர்களை போகச் சொல்லி நமக்கு ஆதரவு கொடுத்தார்கள்.

தமிழகத்தில் பல இடங்களில் வட இந்தியர்கள் வேலைக்கு வந்துவிட்டார்கள், நம்முடைய இளைஞர்களின் வேலைவாய்ப்புகள் பறிபோய்க் கொண்டிருக்கிறது என்று பொது மக்களே நம்மிடம் பேசினார்கள். திருப்பூர் தோழர் முத்துலட்சுமியின் மகன் சக்தி, பயணத்தில் விற்பனை செய்ய எங்களுக்கு கொடுக்கப்பட்ட 100 நிமிர்வோம் இதழ்களையும் விற்றுக் கொடுத்தார். இந்தக் கல்வி உரிமை பிரச்சாரம் மிகவும் அவசியம் என்றும் பாராட்டியதோடு மட்டுமின்றி 40,156 ரூபாயை பொதுமக்கள் நன்கொடையாக அளித்தனர். 7,850 ரூபாய்க்கு புத்தகங்கள் விற்பனையானது. நம் தோழர்கள் மட்டுமின்றி, மற்ற இயக்கங்களைச் சேர்ந்த கருப்புச் சட்டைத் தோழர்களும் பயணத்தைப் பாராட்டி எங்களுக்குப் பல இடங்களில் உணவு வழங்கினார்கள். திமுக, ஆதித் தமிழர் பேரவை, தமிழர் விடுதலை இயக்கம் போன்ற தோழமைக் கட்சிகளையும், அமைப்புகளையும் சார்ந்த தோழர்கள் பல இடங்களில் ஆதரவு தெரிவித்து பயணத்துக்கு தேவையான உதவிகளைச் செய்தார்கள்.

**சங்கரன் கோவில் குழுவின் அனுபவங்கள் பற்றி காவை.இளவரசன்**



ஆகஸ்ட் 21ஆம் தேதி சங்கரன் கோவிலில் ஒண்டிவீரன் நினைவு நாளையொட்டி 144 தடை உத்தரவு போடப்பட்டிருந்தது. அதனால் அங்கு பரப்புரைக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. எனவே எங்களது முதல் பிரச்சாரத்தை ராஜபாளையத்தில் தான் தொடங்கினோம். பிரச்சாரம் நடந்து கொண்டிருந்தபோது இந்து மதத்தைப் பற்றி பேசக்கூடாது என்று கூறி பாதியில் காவல்துறை அனுமதி மறுத்துவிட்டது. மாவட்ட கண்காணிப் பாளர் அலுவலகத்துக்குச் சென்று மாவட்ட கண்காணிப்பாளரிடம் பேசி மீண்டும் மாலை விருதுநகர் பழைய பேருந்து நிலையத்துக்கு அருகில் பிரச்சாரத்தை நடத்தினோம்.

இரண்டாவது நாளில் பாண்டிய நகரிலும், மல்லாங்கு நகரிலும் பிரச்சாரத்தை நடத்தினோம். அன்று மாலை மதுரையில் அனுமதி மறுக்கப் பட்டது. அங்கும் காவல் துறையிடம் பேச்சுவார்த்தை நடத்தி 23ஆம் நாள் காலை பிரச்சாரத்துக்கு அனுமதியளித்தார்கள். மதுரையில் பிரச்சாரத்தை சிறப்பாக முடித்துக்கொண்டு அடுத்து சிவகங்கை சென்றோம். சிவகங்கையில் பிரச்சாரம் செய்து கொண்டிருந்தபோது எதிரே இருந்த வயதான பூக்கடைக்கார பாட்டி "தம்பி கல்வி பற்றிப் பேசுகிறீர்கள், எனக்குப் படிக்க தெரியாது, ஆனால் நீங்கள் பேசுவதைக் கேட்டேன். துண்டறிக்கை கொடுங்கள், எங்கள் வீட்டில் பேரன்-பேத்திகள் படிக்கிறார்கள், அவர்களிடம் கொடுத்து படிக்கச் சொல்லுகிறேன்" என்று கேட்டு வாங்கிச் சென்றார். பிரச்சாரத்துக்கு நன்கொடையாக 10 ரூபாய் நிதியும் வழங்கினார்.

அன்று மாலை மற்றொரு இடத்தில் நடந்த பிரச்சாரத்தில் மந்திரமா, தந்திரமா நிகழ்ச்சியைக் குழந்தைகள் மிகவும் ரசித்துப் பார்த்தனர். ஒரு இடத்தில் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் நமது பிரச்சாரத்தைப் பாராட்டி 500 ரூபாய் நன்கொடை கொடுத்தார். காரைக்குடி மாவட்டத்தின் கரம்பக்குடியில் மட்டும் 4,700 ரூபாயை உண்டியல் வசூலாக அளித்து மக்கள் நமது பிரச்சாரத்துக்கு உற்சாகமான வரவேற்பளித்தனர். இங்கு மட்டும் சுமார் 2.30 மணி நேரம் கல்வி உரிமைகள் பற்றி பிரச்சாரம் செய்தோம்.

25ஆம் தேதி காலை திருச்சி குண்டூரிலும், மதியம் சமயபுரத்திலும் பிரச்சாரம் நடந்தது. சமயபுரத்தில் கோயிலுக்கு சென்று வந்த பக்தர்களிடம் துண்டறிக்கை பிரச்சாரம் செய்தோம். பக்தர்களும் துண்டறிக்கைகளை பெற்றுக்கொண்டு அதில் சொல்லப்பட்டிருக்கிற செய்திகளைப் படித்தனர். நமது பிரச்சாரத்துக்கு ஆதரவாக நன்கொடை களையும் வழங்கினர். பிரச்சாரம் நடந்த எல்லா இடத்திலும் நீட் தேர்வால் நமது மாணவர்களின் மருத்துவ வாய்ப்பு எப்படி பறிபோகிறது என்பதைப் பற்றியும், மோடி அரசால் நமது கல்வி உரிமைகள் எவ்வாறு பறிபோய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றியும் விரிவாகப் பேசினோம். இதுபோன்ற கல்வி உரிமை பிரச்சினைகளை எந்த அரசியல் கட்சியோ அல்லது வேறு யாருமே இவ்வளவு தீவிரமாக எடுத்துச் செய்வதில்லை என்று மக்கள் நமது பிரச்சாரத்துக்கு சிறப்பான ஆதரவை வழங்கினர். எல்லா இடங்களிலும் நம்முடைய துண்டறிக்கையை மக்கள் ஆர்வமாக வாங்கிப் படித்தனர். நமது நிகழ்ச்சிகளையும் ஆழமாகக் கூர்ந்து கவனித்தனர். திமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சியினர் மற்றும் பல்வேறு அமைப்பினர்கள், ஆதரவாளர்கள் பிரச்சாரப் பயணத்துக்கு அவர்களால் இயன்ற ஆதரவு அளித்தனர்.

**மயிலாடுதுறை பரப்புரைக் குழுவின் அனுபவங்கள் பற்றி பாரி.சிவா**




சட்ட எரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு உயிரிழந்த மணல்மேடு வெள்ளைச்சாமி அவர்களின் ஊரில் இருந்து நாங்கள் பிரச்சாரப் பயணத்தைத் தொடங்கினோம். திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தும் இந்தக் கல்வி உரிமை மீட்புப் பரப்புரை பயணம் வெற்றி பெற வேண்டு மென்று பல்வேறு தோழமை அமைப்புகளும் கலந்துகொண்டு வாழ்த்தினர். இரண்டாவது நாள் பிரச்சாரத்தில், ஒரு இடத்தில் நமது பிரச்சார வாகனத்தைப் பார்த்து ஏடிஎம் பாதுகாவலர் ஒருவர் பெரியார் புத்தகங்கள் வேண்டுமென்று கேட்டு, வெளியீடுகளை வாங்கிச் சென்றார்.

மற்றொரு இடத்தில் பிரச்சாரத்தைப் பார்த்து, நம்மைப் பாராட்டியதோடு அனைத்துத் தோழர் களுக்கும் தேநீர் வாங்கிக் கொடுத்துச் சென்றார் ஒருவர். மூன்றாவது நாள் பிரச்சாரத்தில் நாம் பேசிய செய்திகளைக் கேட்டு அவ்வழியாகக் கடந்து சென்ற திமுகவினர் "உங்களுடைய பிரச்சாரம் மிகவும் சிறப்பாக உள்ளது. நீங்கள் பேசும் செய்திகள் மிகவும் அவசியமானது. எங்கள் ஊரிலும் வந்து பிரச்சாரம் செய்யுங்கள்" என்று கேட்டனர். நாம் ஏற்கெனவே திட்டமிட்ட பகுதிகளில் செய்ய வேண்டும் என்பதற்காக மீண்டும் ஒருமுறை வந்து அவர்கள் ஊரில் பிரச்சாரம் செய்வதாகக் கூறினோம். அவர்கள் நம்மிடம் துண்டறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக சென்றனர்.

25ஆம் தேதி காலை தஞ்சாவூரில் உள்ள வேங்கடசாமி நாட்டார் கல்லூரி மாணவர்களிடம் பிரச்சார நோக்கத்தை விளக்கிப் பேசினோம். ஒவ்வொரு வகுப்பறையிலும் துண்டறிக்கைகள் கொடுத்து தனித்தனியாக பிரச்சாரம் செய்தோம். மாணவர்கள் நம்மிடம் பல்வேறு விளக்கங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர். கல்லூரியிலேயே தங்கிக் கொள்ளவும் எங்களுக்கு அனுமதியளித் தார்கள். அவர்களே உணவும் அளித்தார்கள். இது மதிமுகவைச் சேர்ந்த தோழர் ஒருவரின் கல்லூரி. எல்லா இடங்களிலும் மக்கள் பிரச்சாரத்துக்கு பேராதரவைத் தந்தார்கள். எங்களுடைய பிரச்சாரப் பகுதிகள் யாவும் பெரும்பாலும் கிராமங்களாகத்தான் இருந்தன. எல்லா பகுதிகளிலும் கழகத் தோழர்கள் எங்களுக்கு சிறப்பான ஏற்பாட்டைச் செய்து கொடுத்தனர். மிகவும் நிறைவான பிரச்சாரமாக அமைந்தது.

**திருப்பூர் பயண அனுபவங்கள் குறித்து கோவை நிர்மல்**



மேட்டுப்பாளையத்தில் 21ஆம் தேதி காய்கறி சந்தையில் பிரச்சாரம் செய்தோம். அவர்களுக்கு படிக்கத் தெரியாது என்றார்கள். அவர்களிடம் கல்வி உரிமைகள் குறித்தும், நீட் தேர்வு குறித்தும் பேசி புரிய வைத்தோம். முதலில் துண்டறிக்கை வேண்டாம் என்றவர்கள், நாம் பேசிய பிறகு அவர்களே மீண்டும் கேட்டு வாங்கி வைத்துக்கொண்டனர். வீட்டுக்கு கொண்டு சென்று மகன்-மகள்களை படிக்கச் சொல்வதாகவும் ஆர்வத்துடன் கூறினார்கள். நன்கொடையும் அளித்து பயணத்துக்கு உதவி செய்தார்கள்.

பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் இரண்டு பேர், மூன்று பேர் தனியாக சென்று சுமார் 15 இடங்களில் பேருந்தில் ஏறி பிரச்சாரம் செய்தோம்.

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776


# சென்னை பயணக் குழுவுக்கு பக்தர்கள் பொது மக்கள் பேராதரவு

கல்வி உரிமை மீட்பு பரப்புரைப் பயணம் மேற்கொண்ட சென்னைக் குழுவினருக்கு மக்கள் பேராதரவை வெளிப்படுத்தினர்.

1. தோழர்கள் இராவணன், முரளி, அருண், இரண்யா, தேன்ராஜ், செந்தில், பிரியா, ஓவியா - வெயில், மழை என்று பாராமல் கழக துண்டறிக்கையைக் கொடுதது கடைகளில் நிதி வசூல் செய்தனர்.
2. ஏழு நாளில் 16,000 துண்டறிக்கையை மக்களிடையே கொடுத்தனர். மக்களும் தாமாக முன் வந்து துண்டறிக்கை வாங்கி படித்தது மிகச் சிறப்பு.
3. பயணத்தில் கடை வசூல் மட்டும் ரூ.60,000/- கிடைத்தது. இதில் சிறு வியாபாரிகளே அதிக ஆதரவு தந்தனர்.
4. கூடுவாஞ்சேரியைச் சார்ந்த நாடி ஜோதிடர் பழனிச்சாமி என்பவர், பயணச் செலவுக்கு ரூ.2000 நிதியளித்தார். கண்டிகையில் பிரச்சாரத்தைக் கேட்ட பக்தர் ஒருவர் ரூ.500 நன்கொடை வழங்கினார். இப்படி பயணத்தில் ஏராளமான பக்தர்கள் நிதி உதவி தந்தும், பழம், குளிர் பானம், தேநீர் என்று அவர்களால் இயன்ற அளவில் வழங்கி ஆதரவு தந்தனர்.
5. பெரியார் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் நம் உரிமைக்கும் சுயமரியாதைக்கும் குரல் கொடுப்பவர்கள், இவர்கள் நமக்கானவர்கள் என்றுதான் மக்கள் பார்த்தார்கள். கடவுள் மறுப்பாளர்கள் என்று கருதவில்லை.
6. பயணத்தில் ரூ.23,000-க்கு கழக வெளியீடுகள் விற்பனையாகின.
7. பேராசிரியர் கல்விமணி பயணக் குழுவை வரவேற்று திண்டிவனம் நகரம் முழுவதும் சுவரொட்டிகளை ஒட்டி, மதிய உணவுக்கும் ஏற்பாடு செய்தார். பல இடங்களில் கழக ஆதரவாளர்கள், தோழர்கள் தங்குவதற்கும், உணவுக்கும் ஏற்பாடு செய்தது மகிழ்ச்சியளித்தது.
8. வீதி நாடகக் குழுவினர் மத்திய கல்வி வேலை வாய்ப்பு மற்றும் பிற மாநில உரிமைகள் பறிப்பு குறித்து மக்களிடையே கேள்வி பதில் மூலம் பிரச்சாரக் குழுவுக்கும் மக்களுக்கு மிடையே ஒரு உரையாடலை ஏற்படுத்தி மக்களை பரப்புரையுடன் இணைத்தனர்.
9. பயண நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய அனைவரும் இதுபோன்ற பயணத்தை மக்களிடையே தொடர்ந்து நடத்துங்கள் என்றே வலியுறுத்தினர். இது பெரும் ஊக்கத்தைத் தந்தது.
10. வழக்கம்போல் அல்லாமல் காவல்துறை உரிய பாதுகாப்பு தந்தது, பல காவலர்கள் நிதி உதவி தந்தது, புத்தகங்களை வாங்கினர்.

**தொகுப்பு: அய்யனார்**

# மேட்டூர் தமிழ்க்குரிசில் முடிவெய்தினார்



மேட்டூர் தாய்த் தமிழ்ப் பள்ளி நிர்வாகியும், மேட்டூர் அனல் மின் நிலைய ஓய்வு பெற்ற முதுநிலை வேதியரும் பெரியாரியலாளருமான ப. தமிழ்க்குரிசில் (62) 3.9.2018 அன்று மேட்டூரில் உள்ள அவரது இல்லத்தில் முடிவெய்தினார். தாய்த் தமிழ்ப் பள்ளிகளை வளர்த்தெடுக்க பெரும் கவலை கொண்டு பணி ஓய்வுக்குப் பிறகு முழுமையாக அதில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். 'குடிஅரசு' தொகுப்புகளை பெரியார் திராவிடர் கழகமாக இருந்தபோது வெளியிட்ட போது தொகுப்புப் பணியில் பெரும் பங்காற்றிய பெருமைக்குரியவர் தமிழ்க்குரிசில். மேட்டூர் அருகே கொளத்தூரில் இரவு பகலாக பல வாரங்கள் தொகுப்புப் பணி நடந்த போது பணிகளை ஒருங்கிணைத்து 'குடிஅரசு' இதழ்களில் உள்ளது உள்ளவாறே அப்படியே வெளி வர வேண்டும். அப்போது தான் இது வரலாற்று ஆவணமாக எதிர்காலத்தில் நிற்கும் என்பதில் கவனம் செலுத்தி கவலையோடு பணியாற்றியவர் தமிழ்க் குரிசில்.

இறுதி வணக்கம் செலுத்திட கழகத் தோழர்களும் தாய்த்தமிழ்ப் பள்ளி ஆதரவாளர்களும் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர். கழகக் கொடி போர்த்தப்பட்டு வீரவணக்க முழக்கங்களுடன் இறுதி ஊர்வலம் 6 மணி அளவில் புறப்பட்டது. மேட்டூர் மின் மயானத்துக்கு கழகத்தின் பெரியாரியப் பெண்கள் அவரது உடலை சுமந்து சென்றனர். எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி உடல் எரியூட்டப் பட்டது.

அங்கே நடந்த இரங்கல் கூட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் கல்வி மணி (கல்யாணி), பி.யு.சி.எல். தலைவர் கண.குறிஞ்சி, கோபி தாய்த் தமிழ்ப் பள்ளி குமணன், திருச்சி தமிழ் கல்விக் கழகத்தைச் சார்ந்த மோகன், விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த சிவக்குமார், அனல் மின்நிலைய அய்.என்.டி.யூ.சி. சங்கத்தைச் சார்ந்த பாலு, சோலை மாரியப்பன், முல்லை வேந்தன், குரிசில் மைத்துனர் த. தங்கப் பிள்ளை, குரிசில் தம்பி முருகேசன், மேட்டூர் தமிழ்ச் சங்கத்தைச் சார்ந்த சு.கிருஷ்ணசாமி உள்ளிட்ட பலரும் இரங்கல் உரையாற்றினர்.

கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் ஆசிரியர் சிவகாமி உள்ளிட்ட கழகத் தோழர்கள் மற்றும் திருச்சி பேராசிரியர் நெடுஞ்செழியன், அடைக்கலம், அரசெழிலன், புகழூர் விசுவநாதன் உள்ளிட்ட உணர்வாளர்களும் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர்.

'குடிஅரசு' தொகுப்பின் முதல் தொகுதியில் எழுதப்பட்ட அணிந்துரை, தோழர் தமிழ்க்குரிசில் ஆற்றிய பங்களிப்பை இவ்வாறு பதிவு செய்திருக்கிறது.

**"தொகுப்புப் பணியின் ஒருங்கிணைப்பாளராக தோழர் ப. தமிழ்க் குரிசில் செலுத்திய உழைப்பும் சிந்தனையும் அளப்பரியதாகும். கண்டிப்பு நிறைந்த ஆசிரியராக அவர் வழி நடத்தினார். கடமையாற்றிய கழகத்தினர் ஏதேனும் ஒரு நாள் விடுப்போ அல்லது சில மணி நேர தாமத வருகைக்கோ பள்ளி மாணவர்களைப் போல் தயங்கி தயங்கி அவரிடம் அனுமதி கேட்பதும் அவரோ கோரிக்கையில் பாதியை அதுவும் தயக்கத்துடன் அனுமதித்ததை யெல்லாம் இப்போது நினைத்தால் கூட நகைப்பை ஏற்படுத்தக் கூடியவை. மேட்டூர் தாய் தமிழ்ப் பள்ளியில் விடுமுறை காலம் முழுதும் தொடர்ந்த இப்பணிகள் பள்ளி திறப்பிற்குப் பிறகு கொளத்தூர் பெரியார் படிப்பகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டன"** என்று தமிழ்க் குரிசில் பங்களிப்பு பதிவாகியுள்ளது.

# கழகக் கலந்துரையாடல் கூட்டங்கள்

**ஈரோடு வடக்கு** – ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 02.09.2018 அன்று மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. தலைமைக் கழக பேச்சாளர் வேலுச்சாமி தலைமையில் மாவட்ட செயலாளர் வேணுகோபால் முன்னிலை வகித்தார். கலைஞர் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செப்டம்பர் 17 பெரியார் பிறந்த நாள் விழாவை கோபியில் அனைத்து இயக்கங்களும் இணைந்து ஊர்வலம் நடத்துவது எனவும், மாவட்ட முழுவதும் அய்யா பிறந்த நாள் விழாவினை தமிழர் கல்வி மீட்பு பரப்புரை பயணமாக வாரந்தோறும் ஞாயிறன்று ஒவ்வொரு ஒன்றியங்களாக நடத்துவது எனவும், பரப்புரை பயணத் தொடக்க நிகழ்வாக செப்டம்பர் 23 அன்று குருவரெட்டியூரில் பொதுக்கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கலந்துரையாடல் கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள கிளைக் கழகத்தின் தோழர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**காஞ்சி மாவட்ட கலந்துரையாடல்**

02.09.2018 அன்று மாலை 5 மணிக்கு காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் கிராமத்தில் காஞ்சி மாவட்ட கழகக் கலந்துரையாடல்



கூட்டம் தினேஷ்குமார் தலைமையில் ந.அய்யனார் முன்னிலையில் நடைபெற்றது. செப்டம்பர் 17 பெரியார் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு பொதுக்கூட்டம் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

அ.மோகன்ராஜ், இரா.செல்வகுமார், மு.அய்யப்பன், ப.சஞ்சய், சே.வசீகரன், விநாயகமூர்த்தி, ம.வினோத் குமார், மதன் ஆகிய தோழர்கள் கூட்டத்தில் கழகத்தில் இணைந்தனர்.

காஞ்சிபுரம் மாவட்ட தோழர்கள் செங்குட்டுவன், ராஜேஷ், தெள்ளமிழ்து ஆகியோர் பங்கேற்றனர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில இடங்களில் பேருந்தை இயக்கும் நேரம் ஆகியும் கூட, நம்முடைய பிரச்சாரம் முடியும்வரை பேருந்தை இயக்காமல் ஓட்டுநர்களும், நடத்துநர்களும் பிரச்சாரத்துக்கு ஆதரவு அளித்தார்கள். அதேபோல பேருந்து நிலையங்களில் மக்கள் கூடியிருந்த இடங் களுக்கு சென்று 5 நிமிடம், 10 நிமிடம் கல்வி உரிமைகள் குறித்து பேசினோம். நாங்கள் பேசியதை மக்கள் பொறுமையாகக் கேட்டதோடு, எங்களிடம் பல இடங் களில் விளக்கமும் கேட்டனர். பல இடங்களில் பிரச்சாரத்தைக் கேட்ட பிறகு மக்களே துண்டறிக்கைகளை கேட்டு வாங்கிச் சென்றனர். பேருந்துகளில் நாம் பேசியதைக் கேட்டு, அவர்களே மற்ற பேருந்துகளிலும் நம்மை பேசச் சொல்லி கேட்டனர். நீங்கள் பேசுவது மிகவும் அவசியமானது, நீட் தேர்வு இருக்கக் கூடாது என்றும் மக்கள் கருத்து தெரிவித்தனர்.

**தொகுப்பு : ர. பிரகாசு**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9841489896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 7th September 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN